# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

************

## ஊடக அறிக்கை

## 2021-22 நிதியாண்டுக்கான இந்தியாவின் வரவு செலவுத்திட்டம்

நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் பெப்ரவரி 1, 2021 அன்று காகிதமற்ற (டிஜிட்டல்) முதலாவது பட்ஜெட்டை (வரவு செலவுத்திட்டம்) சமர்ப்பித்துள்ளார். 2021-22 நிதியாண்டுக்கான பட்ஜெட் இந்தியாவின் வலுவான V-வடிவ பொருளாதார மீட்சிக்கு சமாந்தரமாக காணப்படும் அதேநேரம், இது கொவிட் -19 மூலமான சவால்களை வெற்றிகொள்கிறது. இந்தியாவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி 2021-22 நிதியாண்டில் 11.5% வளர்ச்சியையும், 2022-23 நிதியாண்டில் 6.8% வளர்ச்சியையும் எட்டவுள்ள நிலையில் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தியா, மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக மாறுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இந்தியா 2024-25 நிதியாண்டில் தனது பொருளாதாரத்திற்கு 5 திரில்லியன் அமெரிக்க டொலர் இலக்கை நிர்ணயித்துள்ளது. 2020-21 நிதியாண்டின் இரண்டாம் அரையாண்டில் (அக்டோபர் 2020 முதல் மார்ச் 2021 வரை) வலுவான முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுவதால், இந்திய பொருளாதாரம் இந்த புள்ளிவிவரங்களை உள்வாங்குவதில் உறுதியாக உள்ளது.

2. பொருளாதாரத்தின் வலுவான செயல்திறன் முதலீட்டாளர்களை கவரும் வகையில் உள்ளது. 2020 நவம்பரில் மாதாந்த வெளிநாட்டு முதலீடு (FPI) எப்போதும் இல்லாத அளவுக்கு 9.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது. அந்நிய செலாவணி இருப்புக்கள் 586 பில்லியன் அமெரிக்கடொலர்களாக பதிவாகியதுடன், இது இந்தியாவின் இறக்குமதி தீர்வையினை 18 மாதங்களுக்கு ஈடுகட்ட போதுமானதாக அமைந்தது. பங்குச் சந்தை சுட்டெண் செயல்திறன் மேலும் வலுவானதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூலதனம் 10 ஆண்டுகளுக்கு பின்னர் 100 வீதத்தை தாண்டியது.

3. கட்டுப்பாட்டு முறைமைகள், இறை, நிதி மற்றும் நீண்டகால கட்டமைப்பு சீர்திருத்தங்கள் ஆகிய நான்கு கொள்கைகளின் அடிப்படையில் அவற்றின் வழிகாட்டல்களுடன் கொவிட் நோயினை அரசாங்கத்தின் சீரான மற்றும் முதிர்ந்த கொள்கை மூலமான பதில் நடவடிக்கைகள் மூலம் எதிர்கொண்டமையால் இந்தியாவில் வலுவான பொருளாதார மறுமலர்ச்சிக்கு வழிவகுக்கப்பட்டது. இதற்கு இணையாக, நாடு முடக்கப்பட்ட காலகட்டத்தில் பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு நிவாரணம் வழங்கவும், படிப்படியாக நாடு

திறக்கப்படுவதற்கு நுகர்வு மற்றும் முதலீட்டை ஊக்குவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

4. 2021-22 நிதியாண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மொத்த செலவினம் 500 பில்லியன் அமெரிக்கடொலர்களுக்கு அருகில் உள்ளது. உலகளாவிய பொருளாதார வீழ்ச்சிக்கு மாறாக, 2020-21 நிதியாண்டின் முதல் பாதியில் விவசாயத்தில் 3.4% வளர்ச்சியைக் கண்ட இந்தியாவின் விவசாயத் துறை, பட்ஜெட்டில் ஒரு பெரிய ஏற்றத்தை பெற்றது. விவசாய கடன் இலக்கு 226 பில்லியன் அமெரிக்கடொலர்களாக உயர்த்தப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட முற்போக்கான சீர்திருத்தங்களின் தொடர்ச்சியாக விவசாயிகளுக்கு எளிமையான பல்வேறு திட்டங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டளவில் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கும் குறிக்கோளுடன் இணைக்கப்பட்டுள்ளன. காப்புறுதிதுறையில் அந்நிய நேரடி முதலீட்டை 49% முதல் 74% வரை உயர்த்துவது போன்ற முதலீட்டாளர்களுக்கு இலகுவான பல்வேறு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் வெளிநாட்டு முதலீட்டிற்கு இந்த பட்ஜெட் மேலும் உத்வேகம் அளிக்கிறது.

5. ஒரு சுயசார்பு இந்தியாவுக்கான (ஆத்மநிர்பார் பாரத்) பார்வையை நிதி அமைச்சர் இந்த பட்ஜெட்டில் கோடிட்டுக் காட்டியுள்ளார். உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல், இளைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குதல், அனைவருக்கும் கல்வியை வழங்குதல், பெண்களை வலுவூட்டல் போன்ற பல்வேறு கூறுகளை பட்ஜெட் கொண்டுள்ளது. சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம்; நேரடி மற்றும் நிதி மூலதனமும் உட்கட்டமைப்பும்; திறன்மிகு அபிவிருத்தி; மனித மூலதனத்தின் புத்துயிராக்கம்; கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்: எளிமையான அரசும் சிறந்த ஆட்சியும் ஆகிய ஆறு விடயங்களின் அடிப்படையில் இந்த பட்ஜெட் உருவாக்கப்பட்டுள்ளது. இவற்றின் கீழ், உற்பத்தி மேலும் ஊக்கப்படுத்தப்பட்டு, புதிய ஆரம்பங்களுக்கு முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. அது மட்டுமல்லாமல் விண்வெளி பயணத் துறையிலும் புதிய இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(இந்தியாவில் நிதியாண்டு (FY) ஏப்ரல் முதல் மார்ச் வரை.)

*************

கொழும்பு
05 பெப்ரவரி 2021